# කාර්යය සාධන වාර්තාව - 2013

# செயலாற்றுகை அறிக்கை - 2013

# Performance Report -2013



ඉදිකිරීම්, ඉංජිනේරු සේවා, නිවාස හා පොදු පහසුකම් අමාත්‍යාංශය

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

Ministry of Construction, Engineering Services, Housing & Common Amenities

நிர்மாணத்துறை, பொறியியல்
சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது
வசதிகள் அமைச்சு

# செயலாற்றுகை அறிக்கை
# 2013

## கௌரவ அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



இலங்கை வரலாற்றில் நிர்மாணத்துறையில் இதுவரை பதிவு செய்யப்பட்ட உச்சளவான வளர்ச்சி வேகத்தைக் கொண்ட முன்னேற்றம் அடையப் பெற்றுள்ள இந்த சந்தர்ப்பத்தில் 2013 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் செயலாற்றுகையை உள்ளடக்கிய அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்கக் கிடைத்ததையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

மேன்மைதங்கிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் தலைமையின் கீழ் 30 வருட பயங்கரவாதம் முற்றாக தோல்வியுறச்செய்யப்பட்டதையடுத்து நாடு துரிதமான அபிவிருத்திப் பாதையில் பயணித்து வருகின்றது. சுதந்திரத்தின் பின்னர் நிர்மாணத்துறை வரலாற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட அதிகபட்ச வளர்ச்சி வேகமான 21.6 சதவீதமான வளர்ச்சி வேகத்தை அடைந்துள்ள ஆண்டாக 2013 ஆம் ஆண்டு வரலாற்றில் இடம்பிடித்துள்ளது. வீடுகள் உள்ளடங்கலாக நிர்மாணத்துறையில் இவ்வாறு அடையப்பெற்றுள்ள விசேட வளர்ச்சி வேகம் காரணமாக இலங்கைக்கு பாரியளவில் பயன்கள் கிடைத்துள்ளதுடன், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் கவனத்தை ஈர்க்கவும் இது காரணமாக அமைந்துள்ளது. உள்நாட்டு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணத்துறையில் உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கும் அதன் மூலம் பல்வேறு வாய்ப்புக்கள் உருவாகியுள்ளமை முக்கிய அம்சமாகும்.

ஜனசெவன தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் 2013 ஆம் ஆண்டில் நாடு முழுவதிலும் 30,000 இற்கும் மேற்பட்ட வீடுகளை நிர்மாணிக்க வீடமைப்பு அமைச்சுக்கு இடையீடு செய்ய முடிந்துள்ளதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

40 வருடங்களுக்கும் மேலாக எவ்வித புனரமைப்புப் பணியும் மேற்கொள்ளப்படாத கொழும்பு நகரத்தின் சுமார் 15 தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை முற்றாக புனரமைக்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதுடன் மாளிகாவத்தை, மொரட்டுவை, சொய்சாபுர, பொரல்ல, சேர்பன்ரைன் உள்ளிட்ட பல வீடமைப்புத் திட்டங்கள் ஏற்கனவே புனரமைப்புச் செய்யப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

அவ்வாறே, கொழும்பு நகரத்தில் குறைந்த வசதிகளைக் கொண்ட 200 இற்கும் அதிகமான குடியிருப்புக்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அவற்றில் வாழும் சுமார் 35,000 குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஜனசெவன சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்நாட்டின் நிர்மாணிப்புத் துறையின் முன்னோடியான அரச, பொறியியல் கூட்டுத்தாபனத்தின் வரலாற்றில் அதிகபட்ச புரள்வு 2013 ஆம் ஆண்டில் அடையப்பெற்றுள்ளதுடன், திறந்த சந்தையில் கடும் போட்டித்தன்மைக்கு மத்தியில் இதுவரை ரூபா 9,000 மில்லியனுக்கும் அதிகமான நிர்மாணக் கருத்திட்டங்கள் அரச துறை மற்றும் தனியார்த்துறையிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தமை விசேட அம்சமாகும்.

இந்நாட்டில் முதல் தடவையாக தேசிய வீடமைப்புக் கொள்கையொன்றை வரைவுசெய்தமை மற்றும் நிர்மாணிப்புத் துறையின் சகல கலைஞர்களையும் தேசிய மட்டத்தில் பாராட்டும் பொருட்டு வரலாற்றில் முதன்முறையாக "மகாபிமானி 2013" என்றழைக்கப்படுகின்ற தேசிய நிர்மாணிப்பு வாரம் மற்றும் விருது வழங்கும் நிகழ்வு 2013 ஆம் ஆண்டில் ஒழுங்குசெய்யப்பட்டதை மற்றுமொரு விசேட அம்சமாகக் குறிப்பிட முடியும்.

பயங்கரவாதம் முற்றாகத் தோல்வியுறச் செய்யப்பட்டதையடுத்து எமது சிறிய நாடு பல்வேறு வெற்றிகளைப் பெற்று பல சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு முன்னேற்றப் பாதையில் பயணித்து வருகின்றது. நாடு, தேசம் சமாதானத்திற்காக இந்த சவால்களை வெற்றிகொள்வதற்கான பலமும் தைரியமும் வழங்கி இந்தப் பயணத்தின் வெற்றிகரமான பங்காளர்களாவதற்கு எம் அனைவருக்கும் வாய்ப்புக் கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

உங்கள் அனைவருக்கும் நல்லதொரு எதிர்காலம்.

**விமல் வீரவங்ச (பா.உ.),**
**நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,**

**வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சர்.**

## கௌரவ பிரதி அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



“நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணத்துறையின் புத்தெழுச்சி” எனும் தொனிப்பொருளுக்கமைய நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சினால் 2013 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை உள்ளடக்கிய அறிக்கைக்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்க வாய்ப்புக் கிடைத்ததையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கையில் பாரிய அபிவிருத்தி இடம்பெற்று வருகின்ற இந்த யுகத்தில் நிர்மாணத்துறைக்கு விசேட இடம் உரித்தாகின்றது. மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கமைய இலங்கையில் வீடுகள் இல்லாத மக்களின் வீடமைப்புச் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வாக மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் அறிவுரைக்கமைய ஆரம்பிக்கப்பட்ட “ஜனசெவன பத்து இலட்சம் வீடமைக்கும் தேசிய வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி நடவடிக்கை” அரச மற்றும் தனியார்த் துறையின் பங்களிப்புடன் அமுல்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி இலக்கை நிறைவேற்றிக் கொள்வதற்காக இந்த அமைச்சின் கௌரவ அமைச்சர் விமல் வீரவங்ச அவர்களின் அறிவுரை மற்றும் வழிகாட்டுதலுக்கமைய அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களினால் ஆற்றப்படுகின்ற செயற்பணி மகத்தானது. இதன் போது வீடுகள் இல்லாத மக்களுக்கு வீடொன்றைப் பெற்றுக்கொடுப்பது மாத்திரமன்றி 40 வருட காலமாக புனரமைப்புச் செய்யப்படாத தொடர்மாடி வீடமைப்புகளைப் புனரமைப்புச் செய்வதும் அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார ரீதியாகவும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தி இலக்குகளை அடைந்துகொள்வதற்காக தொடர்ந்தும் அறிவுரைகளை வழங்கி வருகின்ற மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களுக்கும் அமைச்சு மற்றும் அதன் கீழ் இயங்கி வருகின்ற சகல நிறுவனங்களையும் இந்த இலக்கை நோக்கி வழிநடாத்துகின்ற அந்தப் பணிகளுக்குத் தொடர்ந்தும் ஊக்கமளிக்கின்ற கௌரவ அமைச்சர் விமல் வீரவங்ச அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வாறே இந்த நடவடிக்கைகளை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட பதவியணியினருக்கும் அபிவிருத்திப் பயணத்தில் செயல் ரீதியான முன்னோடிகளாகச் செயற்படுகின்ற அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்ட நிறுவனங்களின் தவிசாளர்கள், பொது முகாமையாளர்கள் உள்ளடங்கலான பதவியணியினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதற்கு இதனை வாய்ப்பாகக் கொள்கின்றேன்.

அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்குவதற்கு சகலரும் ஒன்றிணைந்து நடவடிக்கை மேற்கொள்வோம்.

**லசந்த அழகியவன்ன (பா.உ.)**
**நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள்,**
**வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் பிரதி அமைச்சர்.**

## செயலாளரின் வாழ்த்துச் செய்தி



''இலங்கையில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் வாழ்வதற்கு வீடொன்றைப் பெற்றுக்கொடுத்தல்'' எனும் மகிந்த சிந்தனை எதிர்கால நோக்கிற்கமைய செயற்பட்டு நாட்டு மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்கும் இலக்கை மிகத் துரிதமாகவும் சரியாகவும் அடைந்துகொள்ளும் சவாலை எதிர்கொண்டு நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களினால் 2013 ஆம் ஆண்டுக்காக அமுல்படுத்தப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிர்மாணத்துறையின் புத்தெழுச்சிக்கு வழங்கப்பட்ட ஒத்துழைப்பு பற்றிய தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை சமர்ப்பிக்கக் கிடைத்தமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இலங்கையின் வீடுகளை எண்ணிக்கை ரீதியாகவும் தர ரீதியாகவும் மேம்படுத்த வாழ்வதற்கான உரிமையைப் பாதுகாத்து வீடமைப்புச் சிக்கலைத் தீர்த்துவைப்பதையும் நோக்காகக் கொண்டு தயார் செய்யப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கை வெளியிட்டு வைக்கப்பட்டதுடன், நிர்மாணத்துறையின் புத்தெழுச்சிக்காக தேசியநிர்மாணிப்புக் கொள்கை தயார்செய்யப்பட்டு வருகின்றது. அவ்வாறே, நிர்மாணத்துறையை சரியான திசையில் பயணிக்கச் செய்யும் பொருட்டுநிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவது நாம் பெற்றுள்ள வெற்றிகளாகும்.

இந்த நாட்டின் கிராமிய, பகுதியளவிலான நகர்ப்புற மற்றும் நகர்ப்புறப் பிரதேசங்களில் வாழும் குறைந்த பெறும், நடுத்தர வகுப்பைச் சேர்ந்தவர்கள், அரசாங்க ஊழியர்கள், யுத்தத்தினால் இடம்பெயர்ந்தவர்கள் மற்றும் தோட்டத்துறை மற்றும் மீனவ சமுதாயத்தை இலக்காக் கொண்டு அரச மற்றும் தனியார்த்துறையின் நிதிப் பங்களிப்புடன் வீடுகளை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டதுடன், குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளில் வாழும் சமுதாயத்தை வலுவூட்டுவதற்கு சுயசக்தி மனித அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் அமுல்படுத்தப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பழைய தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்களை புனரமைப்புச் செய்தமை, நகர்ப்புறத் தொடர்மாடி வீடமைப்புத் திட்டங்கள், அரசாங்க மற்றும் ஏனைய வீடமைப்புத் திட்டங்களில் வசிப்பவர்களுக்கு வீடுகளின் சட்டபூர்வமான உரித்தைக் கையளித்தமையும் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பணிகளில் உள்ளடங்குகின்றன.

நாட்டு மக்கள் எதிர்பார்க்கின்ற சேவைகளை வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் பெற்றுக்கொடுப்பதற்காக நிறுவனங்களின் ஊழியர்களது வகிபாகத்தை வலுவூட்டுவதற்கும் நிர்மாணத்துறையின் வளர்ச்சிக்காக நிர்மாணத்துறைக் கலைஞர்கள் மற்றும் தொழில்சார் வல்லுனர்கள் சம்பந்தமாகக் காணப்படுகின்ற பாரம்பரி நிலைமைகளை நீக்கி உயர்மட்டச் சமூக மதிப்பீட்டைப் பெற்றுக்கொடுப்பதற்கு நிர்மாணத்துறைக் கலைஞர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழில் வல்லுனர்களை மதிப்பீடு செய்து பாராட்டும் நிகழ்ச்சித்திட்டமும் தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் இளைஞர்களின் பலத்தை அதிகமாகக் கவர்ந்து சர்வதேச மட்டத்தையும் வென்றெடுக்கக் கூடியவாறான தொழில் வல்லுனர்களை உருவாக்குவதற்கு அர்ப்பணிப்புடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிமாணத்துறையில் தரமான ஒப்பந்ததாரர்களை ஒன்றிணைத்தல் மற்றும் பயிற்சியளிப்பதன் மூலம் நிர்மாணிப்புத் துறையில் துரிதமான அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ் அனைத்து வெற்றிகளையும் அடைந்துகொள்வதற்காக கௌரவ அமைச்சர் விமல் வீரவங்ச அவர்களின் வழிகாட்டல் மற்றும் சரியான தலைமைத்துவம், கௌரவ பிரதி அமைச்சர் லசந்த அழகியவன்ன அவர்களின் ஊக்குவிப்பு மற்றும் ஒத்துழைப்பு, மேலதிக செயலாளர்கள் மற்றும் அமைச்சின் சகல அலுவலர்களும் வழங்கிய ஒத்துழைப்பு, அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் தவிசாளர்கள், பொது முகாமையாளர்கள் உள்ளடங்கலாக அனைத்து அலுவலர்களினதும் அர்ப்பணிப்பு மற்றும் வினைத்திறன் மிக்க சேவை மிகவும் பாராட்டுக்குரியதாகும்.

சவால்களுக்கு மத்தியில் இவ் அனைத்து வெற்றிகளையும் அடைந்துகொள்ள பங்களிப்புச் செய்த மேலே குறிப்பிடப்பட்ட சகலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**பீ.எச்.எல். விமலசிறி பெரேரா,**

**செயலாளர், நிர்மாணத்துறை,**

**பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு.**

## உள்ளடக்கம்


| | பக்க இலக்கம் |
|---|---|
| 1. அறிமுகம் | 30 |
| 2. அமைச்சின் நோக்கும், செயற்பணியும் | 31 |
| 3. அமைச்சின் விடயப்பரப்பு | 31 |
| 4. அமைச்சின் பிரதான விடயப்பரப்புகள் | 32 |
| 5. அமைச்சின் ஒழுங்கமைப்பு | 33 |
| 6. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | 34-35 |
| 7. அமைச்சின் ஒழுங்கமைப்பு | 36-40 |
| 7.1 நிருவாகப் பிரிவு | |
| 7.2 திட்டமிடல் பிரிவு | |
| 7.3 வீடமைப்புப் பிரிவு | |
| 7.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| 7.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| 7.6 நிதிப் பிரிவு | |
| 7.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | |
| 8. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள் | 41-43 |
| 8.1 நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் | |
| 8.2 அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் | |
| 8.3 அரச பொறியியல் கூட்டுத்தாபனம் | |
| 8.4 கட்டிடத் திணைக்களம் | |
| 8.5 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| 8.6 நகரக் குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| 8.7 அரசாங்க தொழில்சாலை | |
| 8.8 ஓசன்வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி | |
| 8.9 தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை | |
| 8.10 கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை | |
| 9. நிதி ஏற்பாடுகள் | 44 |
| 10. 2013 ஆம் ஆண்டுக்கான அமைச்சின் முன்னேற்றம் | 45-49 |
| 10.1 நிருவாகப் பிரிவு | |
| 10.2 திட்டமிடல் பிரிவு | |
| 10.3 வீடமைப்புப் பிரிவு | |
| 10.4 தொழில்நுட்பப் பிரிவு | |
| 10.5 தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு | |
| 10.6 கணக்காய்வுப் பிரிவு | |
| 2013 ஆம் ஆண்டில் அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள் | 50 |

# 1. அறிமுகம்

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகார சபை, கூட்டாட்சி முகாமைத்துவ அதிகார சபை மற்றும் ஓசன் வீவ் அபிவிருத்தித் தனியார் கம்பனி ஆகிய நிறுவனங்கள் இலங்கையில் சகல சனத்தொகை மற்றும் பூகோளப் பிரதேசங்களையும் உள்ளடக்கும் வகையில் பல்வேறு முறையியல்கள் ஊடாக நிதியைப் பெற்றுக்கொண்டு வீடமைப்பு அபிவிருத்தித் தேவைகளை பூர்த்தி செய்ய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றன.

2011 இன் சனத்தொகை மற்றும் வீடமைப்பு கணக்கெடுப்பிற்கமைய இலங்கையிலுள்ள ஒட்டுமொத்த வீடுகளின் எண்ணிக்கை 5,195,331 ஆகும். இவற்றில் 4,471,444 நிரந்தர வீடுகள் காணப்படுவதாக புள்ளிவிபர ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புள்ளிவிபரங்களுக்கமைய இலங்கையின் வீடமைப்புத் தேவை சுமார் 7 இலட்சமாகும்.

இந்தத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு 2013 ஆம் ஆண்டுக்கான வீடமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளன.

மொத்த தேசிய உற்பத்திக்கு நிர்மாணத் துறையிடம் கிடைத்த பங்களிப்பு 2011 இன் இரண்டாம் காலாண்டில் 10.6 சதவீதமாகவிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இந்தப் பெறுமதி 18.3 சதவீதமாக வளர்ச்சியடைந்துள்ளதென சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தகவல்களுக்கமைய தெரியவருகிறது.

இவ்வாறான முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த அரச மற்றும் பகுதி அளவிலான அரச நிறுவனங்கள் முனைப்புடன் பங்களிப்பினை வழங்கி இந்த வளர்ச்சியின் பிரதான பங்காளர்களாக மாறியுள்ளன.

நாட்டின் தேவைகளுக்கமைய சுற்றாடலுக்கு சாதகமான, நிலையான நிர்மாணிப்புக்களை குறைந்த செலவினத்தில் நாட்டிற்கு உரித்தாக்கிக் கொடுப்பதற்கு உள்நாட்டு நிர்மாணக் கலைஞர்களின் அறிவு மற்றும் ஊழியப் பங்களிப்பைப் பெற்றுக்கொள்வதற்கும் அதற்கமைய இதற்குச் செலவிடப்படுகின்ற தொகைகளைச் சேமித்துக்கொள்ளவும் முடிந்துள்ளது.

மேற்படி தேவையினைப் பூர்த்தி செய்வதற்காக நிர்மாணிப்புக் கலைஞர்களை பயிற்றுவித்தல், அவர்களைப் பயன்படுத்தி வீடுகளை நிர்மாணிக்கின்ற பாரிய செயற்திட்டத்தை அமைச்சு அமுல்படுத்தியுள்ளது.

நிர்மாணிப்புத் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் ஈடுபடுவதற்கு எதிர்பார்த்துள்ள குழுக்களை இத்துறைக்கு கவர்வதற்குத் தேவையான வழிகாட்டல் மற்றும் ஊக்குவிப்பதற்குத் தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்குகளைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. அவ்வாறே நிர்மாணிப்புக்குத் தேவையான தரநியமங்களை அறிமுகம் செய்வதற்கும் புதிய தொழில்நுட்ப முன்மாதிரிகளைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவகையில் அதற்கான மாதிரிப் பிரதேசமொன்றை முதன்முறையாக இலங்கையில் பேலியகொட பிரதேசத்தில் தாபிக்கவென ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பொருளாதார அபிவிருத்தியின் அடித்தளமான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் போது, பெருந்தெருக்கள், பாலங்களை நிர்மாணித்தல் மற்றும் பண்டைய காலம் முதல் விவசாய வாழ்க்கை அமைப்புக்குப் பழக்கப்பட்டுள்ள மக்களின் புத்தெழுச்சிக்குச் சமாந்தரமாக பண்டைய தொழில்நுட்பத்துடன் இணைந்த நீர்ப்பாசனப் பராமரிப்பு மற்றும் புதிய நிர்மாணிப்புகள் தொடர்பாகவும் அரச பொறிமுறைக்குத் தேவையான பல்வேறு கட்டடங்களை நிர்மாணிப்பது சம்பந்தமாகவும் எமது அமைச்சின் நிர்மாணிப்பு நிறுவனங்களான அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம், அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம், கட்டிடத் திணைக்களம், அரசாங்கத் தொழிற்சாலைகள் பாரிய பங்களிப்பொன்றை நிறைவேற்றுகின்றன.

## 2. அமைச்சின் நோக்கும், செயற்பணியும்,

### நோக்கு

நிலையான குடியிருப்பு அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கைத்தொழிலின் புத்தெழுச்சி

### செயற்பணி

இலங்கைத் தொழில்முயற்சியாளர்கள், தொழில்வாண்மையாளர்கள் மற்றும் ஊழியர்ப் படையணியைஆற்றல்கள் மற்றும் வளங்கள் மிக்கவர்களாக்கி திட்டமிட்ட சுற்றாடல்களுக்குச் சாதகமான மற்றும் தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்தல் மற்றும் சமுதாயத்தின் பங்கேற்புடன் அடிப்படை வசதிகளைக் கொண்ட குடியிருப்புக்களை உருவாக்குதவதன் மூலம் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

## 3. அமைச்சின் விடயப்பரப்பு

வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக கொள்கைகள், அபிவிருத்தித் திட்டங்களைத் தயார் செய்தல் மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ள உரிய நிறுவனங்களுக்கான வழிகாட்டல்களைப் பெற்றுக்கொடுத்தல்

# 4. அமைச்சின் பிரதான விடயப் பரப்புகள்.

**நிர்மாணிப்புத் துறை**

01. வீடமைப்பு மற்றும் கட்டிட நிர்மாணத் தொழில்நுட்பத் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

02. நிர்மாணக் கைத்தொழிலை மேம்படுத்தல், அபிவிருத்தி மற்றும் ஒழுங்குறுத்தல்.

03. நிர்மாணக் கைத்தொழிலுக்கான இயந்திரசாதனங்களைப் பெற்றுக்கொடுத்தல்.

04. நிர்மாணக் கைத்தொழிலுக்கு ஆலோசனை மற்றும் ஒழுங்குறுத்துகைச் சேவைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் கனரக நிர்மாண உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பற்றிய பயிற்சிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

**பொறியியல் துறை**

01.அரச நிறுவனங்களுக்கு பொறியியல் சேவைகளை வழங்கல்.

02. அரசாங்க கட்டிடங்களுக்கு நியமங்கள் மற்றும் நியதிகளை நிர்ணயித்தல்.

03. அரசாங்க உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களுக்கு நியமங்கள் மற்றும் நியதிகளை நிர்ணயித்தல்.

**அமைச்சின் கீழ் கொள்ளப்படுகின்ற சகல திணைக்களங்கள், சட்டவாக்க நிறுவனங்கள் மற்றும் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் விடயங்கள் சம்பந்தமான கொள்கைகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களைத் தயார் செய்தல்.**

**வீடமைப்புத் துறை**

01. சுற்றாடல் அபாயங்களை எதிர்கொள்ளத்தக்க தொழில்நுட்ப தரங்களைக் கொண்ட வீடுகள் நிர்மாணிக்கப்படுவதை ஊக்குவித்தல்.


02. பொது மக்களின் வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வினைத்திறன்மிக்க வீடமைப்பு நிதி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

**பொது வசதிகள் துறை**

01. கூட்டாட்சி ஆதனங்களின் முகாமைத்துவம்

02. பொது கூட்டாட்சி ஆதனங்களை புனரமைத்தல் மற்றும் வினைத்திறனுடனும், துரிதமாகவும் வீடுகளின் உரித்தைக் கையளிப்பதும்.

# 5. அமைச்சின் நிறுவன ஒழுங்கமைப்பு




ගණ.-ගණකාධිකාරී
නි. අ.-නියෝජ්‍ය අධ්‍යක්ෂ
ස. ලේ.-සහකාර ලේකම්
ස. අ.- සහකාර අධ්‍යක්ෂක

නී. නි.-නීති නිලධාරී
ප. නි.-පරිපාලන නිලධාරී
පරි.-පරිවර්තක
තො. තා. නි.- තොරතුරු තාක්ෂණ නිලධාරී

සං. නි.-සංවර්ධන නිලධාරී
තා.නි.- තාක්ෂණ නිලධාරී
ප්‍ර.ස.- ප්‍රමාණ සමීක්ෂක

ක. ස.- කළමනාකරණ සහකාර
රි.- රියදුරු
කා. කා. ස.- කාර්යාල කාර්යය සහායක


# 6. அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி

| தொ. இல. | பதவி | சம்பள அளவுத் திட்டம் | ஏற்புடைய சேவை | அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | செயலாளர் | SL 4 | | 01 |
| 02 | மேலதிகச் செயலாளர் (நிருவாகம், நிதி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 03 | மேலதிகச் செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 3 | இ.நி.சே. விசேட | 01 |
| 04 | மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்) | SL 3 | இ.பொ.சே. 1 | 01 |
| 05 | பிரதம நிதி அலுவலர் | SL 3 | இ.க.சே. விசேட | 01 |
| 06 | சிரேஷ்ட உதவிச் செயலாளர் (நிருவாகம் | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 07 | பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1 | 01 |
| 08 | பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம் | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 09 | பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே. 1 | 01 |
| 10 | பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே. 1 | 01 |
| 11 | பணிப்பாளர் (USD) | SL 1 | இ.பொ.சே. | 01 |
| 12 | வீடமைப்பு ஆணையாளார் | SL 1 | - | 01 |
| 13 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) | SL 1 | இ.நி.சே. 1.11/111 | 02 |
| 14 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (நிர்மாணத் தொழில்நுட்பம்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 15 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.தி.சே.11/1,11/11 | 01 |
| 16 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல்) | SL 1 | இ.பொ.சே 11/1,11/11 | 01 |
| 17 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்) | SL 1 | இ.பொ.சே.11/1,11/11 | 01 |
| 18 | பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் (USD) | SL 1 | இ.பொ.சே.11/111 | 01 |
| | | | இ.பொ.சே.11/11 | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 19 | உதவிச் செயலாளர் (நிருவாகம்) | SL 1 | இ.நி.சே.111 | 02 |
| 20 | கணக்காளர் | SL 1 | இ.க.சே.11/1,11/11 | 02 |
| 21 | பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் | SL 1 | இ.க.சே | 01 |
| 22 | சட்ட அலுவலர் | SL 1 | திணைக்கள | 01 |
| 23 | தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் அலுவலர் | SL 1 | இ.த.தொ.சே.2/II | 01 |
| 24 | நிருவாக அலுவலர் | MN7 | அ.மு.உ.சே. (சிறப்புத்தரம்) | 01 |
| 25 | செயலாளரின் ஒருங்கிணைப்புச் செயலாளர் (தற்காலிகம்) | -- | -- | 01 |
| 26 | மொழிபெயர்ப்பாளர் | MN6 | மொழிபெயர்ப்பாளர் சேவை | 02 |
| 27 | வரவுசெலவுத் திட்ட உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 28 | வழங்கல் உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 01 |
| 29 | அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 25 |
| 30 | வீடமைப்பு அபிவிருத்தி உதவியாளர் | MN4 | இணைந்த அலுவலர் | 11 |
| 31 | முகாமைத்துவ உதவியாளர் | MN4 | அ.மு.உ.சே. | 43 |
| 32 | தொழில்நுட்ப அலுவலர் | MT2 | இ.தொ.சே. | 05 |
| 33 | கனிய அளவையாளர் (QS) | MT2 | இ.தொ.சே | 01 |
| 34 | சாரதி | PL3 | சாரதி சேவை | 22 |
| 35 | அலுவலக சிற்றூழியர் | PL1 | அலுவலக சிற்றூழியர் சேவை | 22 |
| 36 | விடுதிப் பொறுப்பாளர் | PL1 | திணைக்களம் | 01* |
| **மொத்தப் பதவிகளின் எண்ணிக்கை** | | | | **163** |

* பதவி வகிப்பவருக்கு தனிப்பட்ட வகையில்

# 7. அமைச்சின் ஒழுங்கமைப்பு



### 7.1. நிருவாகப் பிரிவு

***"நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சினால் அரசாங்கக் கொள்கைகளை அமுல்படுத்தும் போதும் பொது நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பல்வேறு பணிகளின் போதும் அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் ஒத்துழைப்பினை வழங்கி அதற்குத் தேவையான வேலைச் சூழலை ஒழுங்குசெய்து கொடுத்தல் மனித வள மற்றும் பௌதீக வளங்களை வினைத்திறனுடனும் உற்பத்தித் திறனுடனும் முகாமைத்துவம் செய்வது நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகிறது"***

1. அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அலுவலர்களினதும் தாபான நடவடிக்கைகளை பேணி வருதல்.
2. அமைச்சின் சகல பராமரிப்பு நடவடிக்கைகளும்.
3. அமைச்சின் வழங்கல் நடவடிக்கைகள்
4. அமைச்சுடன் இணைந்த நிறுவனங்களின் அமைச்சின் தலையீட்டின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிருவாக நடவடிக்கைகளும்
5. அமைச்சின் பதவியணி சம்பந்தமான நடவடிக்கைகள்.
6. அமைச்சின் சகல பிரிவுகளுக்கும் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.
7. அமைச்சின் இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்.
8. உற்பத்தித் திறன் செயற்பாடுகள் மற்றும் பயிற்சி அமர்வுகளை நடாத்தல்.
9. அமைச்சின் நடவடிக்கைகளுக்கான போக்குவரத்து வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்.

### 7.2. திட்டமிடல் பிரிவு

***"அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிடப்பட்டவாறு முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு நிறுவனங்களை வழிநடாத்த உதவுதல்"***

***"வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையில் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய சரியான தகவல்களைப் பெற்றுக்கொடுப்பதன் மூலம் உரிய தரப்பினர்கள் மற்றும் பொதுமக்களை அறிவுறுத்தல்"***

***"வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறையின் அபிவிருத்தித் தேவைகளை இனங்கண்டு நிறுவனங்களினால் தயார் செய்யப்படுகின்ற கருத்திட்டப் பிரேரணைகளை நிதி, திட்டமிடல் அமைச்சினூடாக அங்கீகரித்துக்கொள்ள உதவுதல்"***

1. அமைச்சின் நோக்கு மற்றும் நோக்கங்களுக்கு ஏற்புடையதாக அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் செயல் ரீதியான திட்டத்தைத் தயார் செய்வதற்கான உரிய ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள்.
2. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்த மற்றும் வருடாந்த செயற்திட்டத்திற்கமைய மதிப்பீடு செய்தல் (மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடத்துவதன் மூலம்).
3. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றத்தை மாதாந்தம், காலாண்டு அடிப்படையில் மதிப்பீடு செய்து அந்த அறிக்கைகளை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்.
4. வரவு செலவுத்திட்ட விவாத குழுநிலைக்கு அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைத் தயார் செய்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
5. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் சம்பந்தமான தகவல்களைத் தயார் செய்வதும் அறிக்கையிடுவதும்.
6. அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள கருத்திட்டப் பிரேரணைகளை தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பதும் ஒருங்கிணைப்புச் செய்வதும்.
7. அமைச்சு மற்றும் அதன் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படுகின்ற அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி பொதுமக்களை அறிவுறுத்துவதற்காக ஜனசெவன செய்திப்

பத்திரிகையை வெளியிடுவதற்கான நடவடிக்கையினை ஒருங்கிணைப்புச் செய்தல்.

## 7.3. வீடமைப்புப் பிரிவு

***"வீடமைப்புத் துறையின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக வீடமைப்பு அபிவிருத்தி மற்றும் பொதுவசதிகள் ஆகிய விசேட துறைகளின் கீழ் தேசிய திட்டங்களை திட்டமிடல், திட்டங்களைத் தயார் செய்தல், வழிநடாத்தல், பின்னாய்வு, மற்றும் அத்துறையில் ஈடுபட்டுள்ள அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு வழிகாட்டுதல்"***

### 1. கொள்கைகளை வகுத்தல்

- தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்தல்.
- வரைவு செய்யப்பட்ட தேசிய வீடமைப்புக் கொள்கைக்கு மக்களின் கருத்துக்களைக் கோருதல்/ பத்திரிகை, இணையத்தளம், தொலைபேசி, பெக்ஸ் ஊடாக
- வரைவுத் தேசிய வீடமைப்புக் கொள்கை பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெளியிடப்பட்டமை.




### 2. காணிகள் பற்றிய கடமைகள்

- வீடமைப்பு அபிவிருத்திக்கு காணிகளைச் சுவீகரித்தல்/ பொறுப்பேற்றுக் கொள்வது சம்பந்தமான நடவடிக்கைகள்
- வீடமைப்பு நோக்கங்களுக்கு காணிகளை நீக்குவது சம்பந்தமான நடவடிக்கைகள்
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் 8(1) பிரிவின் கீழ் காணிகள்/ வீடுகளுக்கான சட்ட ரீதியான உரித்தினை பொதுமக்களுக்கு நீக்குதல்.
- தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்குரித்தான காணிகளில் சட்ட விரோதமாக வீடுகளை நிர்மாணித்து வசித்துள்ள வசிப்பாளர்களை அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய ஒழுங்குபடுத்தல்.

### 3. வீடமைப்பு அபிவிருத்தி

ஜனசெவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் - தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை.

கிராமிய மற்றும் நகர்ப்புறப் பிரதேசங்களில் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல் (விசிறி வீடமைப்பு, விருகம்மான, தோட்ட வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், சசுநென்செவன நிகழ்ச்சித்திட்டம், சஹ சவிய நிகழ்ச்சித்திட்டம்)

- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல்.
- உபஹார கடன் நிகழ்ச்சித்திட்டம்.
- வீடமைப்புத் திட்டங்கள் சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களைச் சமர்ப்பித்தல்.
- வேறு அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்படுகின்ற வீடமைப்புத் துறை சம்பந்தமான அமைச்சரவை விஞ்ஞாபனங்களுக்கான அவதானிப்புக்களைச் சமர்ப்பித்தல்.
- நகமு புறவர தொடர்மாடி வீடுகளை புனரமைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை கண்காணிப்புச் செய்வதும் பின்னாய்வு செய்வதும்.

- குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமுதாயத்தை அபிவிருத்தி செய்தல்.

ஜனசெவன சுயசக்தி மனித நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்தல். இதன் கீழ் பின்வரும் வீடமைப்புக் கருத்திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்தல். மொரட்டுவ அங்குலான தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டத்தின் கட்டம் I மற்றும் II.

- மொரட்டுவ லுனாவ தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டம்.
- தலவாக்கலை லிந்துள மீள் வீடமைப்பு மயமாக்கல் கருத்திட்டம்.
- சிலாபம் நகரசபை ஊழியர்களின் வீடமைப்புத்திட்டம்.
- ஜனசெவன திரிய நகர விசிறி வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம்.
- சீத்தாவக நகர வீடமைப்புக் கருத்திட்டம்.
- சமுத்திரகம நகர வீடமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் - திருகோணமலை.

4. கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான சிபாரிசுகள் பற்றிய அவதானிப்புகளைப் பெற்றுக் கொடுத்தல்.
5. ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கையின் பொருளாதார, சமூக மற்றும் கலாசாரம் பற்றிய அறிக்கைக்கு உள்நாட்டு வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான தகவல்களை அறிக்கையிடல்.
6. ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் சொத்துக்கள் உரிமையைப் பாதுகாப்பதற்காக இலங்கையில் காணப்படுகின்ற சட்டங்கள் ஒழுங்குவிதிகள் பற்றி மேற்கொள்ளப்பட்ட ஆய்வுக்கான விடயங்களைச் சமர்ப்பித்தல்.
7. ஜனசெவன அமைச்சுக்களுக்கு இடையிலான குழுவின் செயற்பாடு.
8. மாவட்ட, பிரதேச மற்றும் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்.
9. தேசத்திற்கு மகுடம் கூட்டு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் கண்காட்சிகளை நடாத்தல்.
10. ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்புத் தொண்டர் ஊழியர் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.
11. உலக குடியிருப்புத் தினக் கொண்டாட்டம்.

## 7.4.தொழில்நுட்பப் பிரிவு

### வேலைகள் பிரிவு

***"நிர்மாணிப்புக் கருத்திட்டங்களுக்கு நியாயமான மற்றும் தாங்கிக்கொள்ளக் கூடிய விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் ஒட்டுமொத்த நிர்மாணிப்புக் கைத்தொழிலின் மொத்த நிர்மாணிப்புச் செலவினத்தைக் கட்டுப்படுத்தல்"***

***"அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் நிர்மாணக் கருத்திட்டங்களுக்கு வெளிப்படைத் தன்மை மிக்க நியாயமான விலைகளுக்கமைய ஒப்பந்ததாரர்களைத் தேர்ந்தெடுக்க உதவுதல்"***

அரசாங்க நிறுவனங்களின் நிர்மாணிப்பு சம்பந்தமான நிலையான தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொடுத்தல், அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களில் வழங்கல் குழுக்களை நியமனம் செய்தல், ஒப்பந்த வித்தியாசங்களுக்கு அமைச்சின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொடுத்தல், அமைச்சின் வழங்கல் குழுவின் தீர்மானங்களைப் பெற்றுக்கொடுத்தல், ஒப்பந்ததாரர்கள் சம்பந்தமான நிர்மாணிப்புத் துறைக்குரிய தரவுக் கட்டமைப்பு மற்றும் நிர்மாணிப்புத் துறை சம்பந்தமான விலைகள் பற்றிய தரவுக்கட்டமைப்பைப் பேணிவரல்.

### நிர்மாணிப்புத் தொழில்நுட்பம்

***"சுற்றாடலுக்குச் சாதகமான, தரமான நிர்மாணிப்புக் கைத்தொழிலை ஏற்படுத்துவதற்கு அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை வழிநடாத்தல்"***

நிர்மாணிப்புத் துறையுடன் இணைந்துள்ள நிர்மாணிப்பு மற்றும் பொறியியல் சேவைகளை வழங்கும் நிறுவனங்களை நிர்மாணிப்புக் கைத்தொழிலின்

முன்னேற்றத்திற்காக வழிநடாத்தல். நிர்மாணத் துறைக்குத் தேவையான ஊழியப் படையைத் தயார் செய்தல், தொழில் வல்லுனர்கள், நிர்மாணிப்புக் கலைஞர்களை திறமையும் அறிவும் மிக்கவர்களாக்குதல்.

அறிவுமிக்கவர்களாக்குவதற்கும் தரமான நிர்மாணிப்புகளை மேற்கொள்வதற்குமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களை வழிநடாத்தல்.

## 7.5. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

இந்தப் பிரிவு 1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு ஆதன உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நிறைவேற்றுகின்றது. அவ்வாறே, 1972 இன் 7 ஆம் இலக்க வாடகைச் சட்டத்தின் கீழ் பொறுப்பளிக்கப்பட்டுள்ள சில பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது.

"*மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள பிரதான நோக்கங்களான வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுத்தல், அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக் நட்டஈடு வழங்குதல் போன்ற நோக்கங்களுக்காக இந்தப்பிரிவு செயற்பட்டுவருகிறது"*

## 7.6. நிதிப் பிரிவு

*"அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்புடையதாகின்ற நோக்கங்களை அடைந்துகொள்ளத் தேவையான நிதி வளம் மற்றும் ஆலொசனையைப் பெற்றுக்கொடுத்தல், மேற்படி வளங்களைப் பயன்மிக்கவாறும் வினைத்திறனுடனும் பயன்படுத்துவதற்குத் தேவையான கட்டமைப்பு மற்றும் நிருவாக முறைகள் பற்றி ஆலோசனை வழங்குதல்''*

1.நிதி பற்றித் திட்டமிடல்.

2. வரவுசெலவு பற்றித் திட்டமிடல்

3. நிதியைப் போதியளவிற்கு உரிய நேரத்திற்குப் பெற்றுக்கொள்ளல்.

4. நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நிதி வழங்குதல் மற்றும் செலவிடல்

5. சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு செலவினம் மற்றும் நிதி முன்னேற்றம் பற்றி உரிய திகதிகளுக்கு அல்லது அதற்கு முன்னர் அறிக்கையிடல்

## 7.7. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

*''நிறுவனங்களின் உத்தேச நோக்கங்களை யதார்த்தங்களாக மாற்றியமைத்துக் கொள்வதற்காக சிறந்த நிதி நிருவாகம் மற்றும் முறையான முகாமைத்துவத்தை தாபித்தல்''.*

அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்களின் நிதி நிருவாகம் மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகளில் பங்கேற்று அந்த நடவடிக்கைகளை மென்மேலும் முறையாகவும் வினைத்திறனுடனும் மேற்கொள்வதற்காக முகாமைத்துவத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்து உதவுதல் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

# 8. அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்

## 8.1. நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம்

நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD) 1957 இல் அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றாகும். தற்போது நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் கீழ் அதன் தவிசாளரின் தலைமையிலான பணிப்பாளரின் கீழ் இது இயங்கி வருகின்றது.




**நிர்மாணிப்புத் துறைக்குத் தேவையான மனித வள அபிவிருத்தி**

## 8.2. அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம்

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் 1971 ஒக்டோபர் 01 ஆம் திகதி பொறியியல் நிறுவனமொன்றாகத் தாபிக்கப்பட்டது.

இந்தக் கூட்டுத்தாபனம் பிரதான பொறியியல் நிறுவனம் என்ற வகையில் பாலங்கள், பெருந்தெருக்கள், கட்டிடங்கள், சுரங்கப் பாதைகள், நீர்ப்பாசனம் மற்றும் நீர் வழங்கல் திட்டங்கள் போன்றவற்றைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் நிர்மாணிப்பதன் மூலம் இந்த நாட்டின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி வருவதுடன் பாலங்களை நிர்மாணித்தல் தொடர்பில் இலங்கையிலுள்ள முக்கிய நிறுவனமாகவுள்ளது. அவ்வாறே சுரங்கப் பாதைகளை நிர்மாணிக்கும் ஒரே இலங்கை நிறுவனமும் இந்தக் கூட்டுத்தாபனமாகும்.



கொங்ரீட் நிர்மாணப் பிரிவு, இரத்மலாலை



அஸ்போல்ட் காபட் உற்பத்தி நிலையம்



விஞ்ஞான ஆய்வுகூடக் கட்டிடம்

## 8.3. அரசாங்கப் பொறியியல் கூட்டுத்தாபனம்

நிர்மாணிப்பு, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் கீழ் பேணி வருகின்ற பகுதியளவான அரச நிறுவனமொன்றான இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 1962 ஜனவரி 01 ஆம் திகதிய 12841 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

பொறியியல் கூட்டுத்தாபனமானது நிர்மாணிப்புத் துறையின் அரசதுறையைச் சேர்ந்த முன்னோடி நிறுவனமாகும். இதன் மூலம் பொறியியல் சேவையை வழங்குதல், ஆலோசனைச் சேவைகளை வழங்குதல், நிர்மாணிப்பு இயந்திர சாதனங்களை வழங்குதல், திட்டங்களை வடிவமைத்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் போன்றன நிறைவேற்றப்படுகின்றன.



விமானப் படை உத்தியோகபூர்வ வீடமைப்புத் தொகுதி – குவன்புர கட்டிடம்



வத்தளை நீதிமன்றக் கட்டிடத் தொகுதி

## 8.4 கட்டிடங்கள் திணைக்களம்

ஆரம்பத்தில் அரசாங்க வேலைகள் திணைக்களத்தின் ஒரு பகுதியாகக் காணப்பட்டதுடன் 1969 இல் “ஏ” தரத்தைச் சேர்ந்த திணைக்களமொன்றாக கட்டிடத் திணைக்களம் தாபிக்கப்பட்டது. அப்போதைய சகல அரச கட்டிடங்கள் மற்றும் அது சம்பந்தமான சேவைகளினதும் நிர்மாணிப்பு நடவடிக்கைகள், பராமரிப்பு நடவடிக்கைகளுக்கான ஏற்பாடுகள் கட்டிடத் திணைக்களத்திற்குப் பெற்றுக் கொடுக்கப்பட்டதுடன். மேற்படி சகல நடவடிக்கைகளும் கட்டிடத் திணைக்களத்தின் 27 மாவட்ட பொறியியல் அலுவலகங்கள் ஊடாக 5000 இற்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்களைப் பயன்படுத்தி நிறைவேற்றப்பட்டன.

1989 இல் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டதையடுத்து கட்டிடத் திணைக்களம் கொழும்பில் அமைந்துள்ள தலைமையகம் மற்றும் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் தாபிக்கப்பட்ட பிரதான 7 பொறியியல் அலுவலகங்களை உள்ளடக்கியதாக மீளமைக்கப்பட்டது.

**பத்தரமுல்ல ஆளடையாள செயலகம்**





**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நிர்மாணிக்கப்படுகி**

**யக்கல புவிச்சரிதவியல், சுரங்கப் பணியகத்தின்**



## 8.5. தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களம்

இதன் பிரதான செயற்பணியாகவிருப்பது, இலங்கையிலுள்ள காணிகளில் பொருளாதார, சமூக, பௌதீக மற்றும் சுற்றாடல் பிரிவுகள் பற்றிய கூட்டுத்திட்டங்களைத் தயார் செய்தல், மேம்படுத்தல், ஒழுங்குறுத்துவதை நோக்காகக் கொண்டு தேசிய பௌதீகத் திட்டங்களைத் தயார் செய்வதும் அமுல்படுத்துவதும், இயற்கை வசதிகளைப் பாதுகாப்பதும், இயற்கைச் சூழல், கட்டிடக் கலை மற்றும் வரலாற்று முக்கியத்துவம் மிக்க பிரதான கட்டிடங்கள் மற்றும் இயற்கை வனப்பு மிக்க இடங்களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்வதாகும்.

## 8.6. நகர குடியிருப்பு அதிகாரசபை

2008 இன் 36 ஆம் இலக்க நகர குடியிருப்பு அதிகாரச் சபைச் சட்டத்திற்கமைய இந்த அதிகாரசபை நிலையான நகர குடியிருப்பு அபிவிருத்தியை ஏற்படுத்துவதை உறுதிசெய்யும் பொருட்டு தற்போது காண்படுகின்ற வீட்டு அலகுகளை மேம்படுத்துவதன் மூலம் அல்லது சிறந்த நல்ல வீடமைப்பு வசதிகள் மற்றும் ஆகக் குறைந்த வசதிகளுக்கான பிரவேசத்தை செய்துகொடுப்பதன் மூலம் சேவை வசதிகள் குறைவான நகரக் குடியிருப்புகளில் வசிக்கும் ஆட்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு தாபிக்கப்பட்ட நிறுவனமாகும்.

அனுராதபுரம் துரு இதுரும் கம வீடமைப்புக் கருத்திட்டம்





**மொறட்டுவ – லுனாவை வீடமைப்புக் கருத்திட்டம்**

## 8.7.அரசாங்க தொழிற்சாலை

அரசாங்கத் தொழிற்சாலை மூலம் அரசாங்க நிறுவனங்களுக்கு இயந்திர, பொறியியல் துறையில் உலோக மற்றும் தளபாடங்கள் சம்பந்தமான வேலைகள், பொருட்கள், சேவைகளை ஆற்றும் பணிகள் மற்றும் இயந்திரப் பொறியியல் துறையின் வேலைத்தளப் பயிற்சியளிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.



ரம்பகன் ஓயா கருத்திட்டம்



பிளாஸ்டிக் மூலம் எரிபொருள் தயாரிக்கும் கருத்திட்டம்

## 8.8.ஓஷன் வீவ் அபிவிருத்தி தனியார் கம்பனி

1996 ஜனவரி 01 ஆம் திகதி ஓஷன் வீவ் தனியார்க் கம்பனி ஆரம்பிக்கப்பட்டது.

ஜனசெவன 10 இலட்சம் வீடமைக்கும் தேசிய கொள்கைக்கு பலம் சேர்க்கும் அரச நிறுவனம் என்றவகையில் நம்பிக்கையும் பொறுப்பும் மிக்கதாக தனியார் நிறுவனமொன்றாக வினைத்திறனை மையமாகக் கொண்டு இந்தக் கம்பனி வீடமைப்புச் சந்தையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்தி வீடமைப்புத் தேவைகளைப் பூர்த்திசெய்து கொடுக்க செயற்பட்டு வருகின்றது.



**கஹதுடுவ வீடமைப்புக் கருத்திட்டம்**

## 8.9. தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையானது 1979 இன் 17 ஆம் இலக்க தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரச் சபைச் சட்டத்தின் மூலம் இலங்கையில் வீடமைப்பு அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகாரசபை அதன் கொழும்பில் அமைந்துள்ள பிரதான அலுவலகத்திற்கு மேலதிகமாக 25 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2 நகர அலுவலகங்களைக் கொண்டுள்ளதுடன் நாடு முழுவதும் தனது நடவடிக்கைகளை அமுல்படுத்தி வருகின்றது.



நவீனமயப்படுத்தப்பட்ட சொய்சாபுர தொடர்மாடி வீடமைப்புத் திட்டம்

## 8.10. கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை

2003 இன் 24 ஆம் இலக்க பொதுவசதிகள் சபை (திருத்தச்) சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட கூட்டாட்சி முகாமைத்துவ அதிகாரசபை கூட்டாட்சி நிர்மாணிப்புகள் மற்றும் முகாமைத்துவம் சம்பந்தமான ஒழுங்குறுத்தல் அதிகாரசபையாகும். மேலும் 1982 இன் 45 ஆம் இலக்க, 2003 இன் 39 ஆம் இலக்கச் சட்டங்கள் மூலம் திருத்தியமைக்கப்பட்ட இருப்பிடக் கூறுகள் சொத்தாண்மைச் சட்டத்தின் நியமங்களை ஒழுங்குறுத்துவதும் இந்த அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் மற்றுமொரு முக்கிய நோக்கமாகும்.



கூட்டாட்சி ஆதனங்களில் வசிப்பவர்களை

## 9. நிதி ஏற்பாடுகள்

**அமைச்சின் உள்ளக பணிகளுக்கு ஏற்பாடுகளைப் பெற்றுக்கொடுத்தல்**

| நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | உத்தேச முன்னேற்றம் கால எல்லை | 2013.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (நிதி) | விகிதம் |
|---|---|---|---|
| கருத்திட்டம் 01 | 55,952,000/- ஆன மீண்டெழும் செலவினம் | 52,369,867/- | 94% |
| | 6,295,000/- ஆன மூலதனச் செலவினம் | 6,167,557/- | 98% |
| கருத்திட்டம் 02 | 149,708,000/- ஆன மீண்டெழும் செலவினம் | 143,280,367/- | 96% |
| | 3,450,000/- ஆன மூலதனச் செலவினம் | 3,138,850/- | 91% |

* மேலே சகல கருத்திட்டங்களுக்குமான உத்தேச கால எல்லை ஒரு வருடமாகும்.

**அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு ஏற்பாடுகளைப் பெற்றுக்கொடுத்தல்**

| நிகழ்ச்சித்திட்டம் / கருத்திட்டம் | உத்தேச முன்னேற்றம் கால எல்லை | 2013.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் (நிதி) | விகிதம் |
|---|---|---|---|
| கருத்திட்டம் 03 நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி | 27,500,000/- ஆன மீண்டெழும் செலவினம் | 27,500,000/- | 100% |
| | 90,300,000/- ஆன மூலதனச் செலவினம் | 83,033,620/- | 92% |
| கருத்திட்டம் 04 வீடமைப்புத் தேவைகளுக்கான வசதிகளை செய்து கொடுத்தல் | 78,100,000/- ஆன மீண்டெழும் செலவினம் | 66,654,185/- | 85% |
| | 2,630,835,000/- ஆன மூலதனச் செலவினம் | 2,119,504,270/- | 81% |

* முற்பண பீ கணக்கின் கடன் நிலுவை வரையறை

| | செலவின உச்ச வரையறை ரூ. | பெறுகைகளின் ஆகக் குறைந்த வரையறை ரூ. | வரவு நிலுவையின் உச்ச வரையறை ரூ. |
|---|---|---|---|
| ஒதுக்கீட்டுச் சட்டத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட வரையறைகள் | 7,500,000.00 | 4,000,000.00 | 70,000,000.00 |
| இறுதியாண்டின் உண்மைப் பெறுமானங்கள் | **5,528,569.00** | **5,148,395.00** | **23,877,959.00** |
| திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் கூட்டுத்தொகை | **8,177,114.00** | **7,226,640.00** | **24,448,259.00** |

## 10. 2013 ஆம் ஆண்டுக்கு அமைச்சின் முன்னேற்றம்

### 10.1. நிருவாகப் பிரிவு

#### ❖ அமைச்சின் பதவியணி வெற்றிடங்கள்

அமைச்சின் பதவிநிலைத் தரத்தைச் சேர்ந்த பதவிகளாகக் கருதப்படுகின்ற மேலதிகச் செயலாளர் (தொழில்நுட்பம்), கணக்காளர் மற்றும் சட்ட அலுவலர் ஆகிய பதவி வெற்றிடங்களை 2013 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யும் ஆற்றல் கிடைத்தது. மேலும் 2012 ஆம் ஆண்டில் வெற்றிடமாகக் காணப்பட்ட 2 மொழிபெயர்ப்பாளர் பதவிகளில் ஒரு பதவியைப் பூர்த்தி செய்யும் ஆற்றல் கிடைத்தது. எவ்வாறாயினும், 2012 ஆம் ஆண்டில் வெற்றிடமாகக் காணப்பட்ட பிரதம நிதி அலுவலர் பதவியின் வெற்றிடத்தைப் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை. அதற்கான பிரதான காரணம் இலங்கைக் கணக்காளர் சேவையின் விசேட தரத்தைச் சேர்ந்த அலுவலர்களுக்கு நிலவுகின்ற பற்றாக்குறையாகும்.

மேலும் 2012 ஆம் ஆண்டிலும் வெற்றிடமாகக் காணப்பட்ட பிரதிப் பணிப்பாளர் (பொறியியல் சேவைகள்), பிரதிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு அபிவிருத்தி) ஆகிய பதவிகள் அதற்குரிய ஒவ்வொரு நாடளாவிய சேவைகளின் அலுவலர்களது பற்றாக்குறை காரணமாக 2013 ஆம் ஆண்டிலும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அதற்கு மேலதிகமாக இந்த அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பப் பதவிகள் 05 உம் கனிய அளவையாளர் பதவியும் ஒவ்வொரு ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறைகளையும் அங்கீகரித்துக்கொள்ளும் செயற்பாட்டில் இடம்பெற்ற தாமதம் காரணமாக இந்த வெற்றிடங்களைப் பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை.

மேலும் 2012 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 163 ஆகுமென்பதுடன், 2013 ஆம் ஆண்டில் இது 182 ஆக அதிகரித்துள்ளது. மேலும் 2012 ஆம் ஆண்டில் 31 ஆகக் காணப்பட்ட ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டின் இறுதியில் 27 ஆகக் குறைந்துள்ளது.

#### ❖ பதவியணியும், ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறையும்

பட்டதாரி பயிலுனர் திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் அரசாங்கச் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு 19 அபிவிருத்தி அலுவலர் பதவிகளை இந்த அமைச்சுக்கென அங்கீகரித்துக் கொள்ள முடிந்ததுடன், இந்த அனைத்துப் பதவிகளும் 2013 ஆம் ஆண்டு நிறைவடைய முன்னர் பூர்த்தி செய்துகொள்ளப்பட்டுள்ளன.

இந்த அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியான தொழில்நுட்ப அலுவலர் மற்றும் கனிய அளவையாளர் ஆகிய பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு ஒழுங்கு முறைகளுக்கு 2013 ஆம் ஆண்டில் அரசாங்கச் சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதற்கமைய 2014 ஆம் ஆண்டு நிறைவடைய முன்னர் குறித்த பதவி வெற்றிடங்களைப் பூர்த்தி செய்துகொள்ள முடியுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

#### ❖ அமைச்சரவை விஞ்ஞாபனங்களும் பாராளுமன்ற வினாக்களும்

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சின் விடயப்பரப்பிற்கு உரித்தான வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் பொறியியல் நடவடிக்கைகள், அமைச்சின் கீழ் இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்களின் பிரதான விடயப்பரப்புகள் மற்றும் நிருவாக நடவடிக்கைகள் சம்பந்தமாக 2013 ஆம் ஆண்டில் இந்த அமைச்சினால் 40 அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சர்ப்பிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக அமைச்சரவைக் குறிப்புகள் 03 உம் சமர்ப்பிக்கப்படுள்ளன.

இந்த அமைச்சின் விடயப்பரப்பின் கீழ் கொள்ளப்படுகின்ற விடயங்கள் சம்பந்தமாக 2013 ஆம் ஆண்டில் 10 பாராளுமன்ற வினாக்கள் கேட்கப்பட்டிருப்பதுடன் அந்த அனைத்து வினாக்களுக்கும் பதில் அனுப்ப நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அவ்வாறே ஆலோசனைக் குழுவினூடாக இந்த அமைச்சில் சமர்ப்பிக்கப்பட்ட 62 கேள்விகளுக்கும் இந்த ஆண்டில் பதில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

#### ❖ பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு பதில் நடவடிக்கை மேற்கொள்ளுதல்

பிரதானமாக பொதுமக்களின் கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுவது

வீடமைப்புடன் சம்பந்தமான சிக்கல்கள் தொடர்பிலாகுமென்பதுடன் ஊழியர்களின் நிறுவன ரீதியான சிக்கல்கள் தொடர்பான முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்களும் உள்ளன. குறிப்பாக ஜனாதிபதி அலுவலகம், பிரதம அமைச்சர் அலுவலகம் மற்றும் பொது மனுக் குழு ஊடாக மேற்படி கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

இவ் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் தலையிட்டு நடவடிக்கை மேற்கொள்வதற்கு அமைச்சு உடனடியாகச் செயற்பட்டுள்ளது. குறிப்பாக வீடமைப்புச் சிக்கல்கள் சம்பந்தமான கோரிக்கைகள், வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை, நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை போன்ற நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டு துரிதமாக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### ❖ பயிற்சி மற்றும் உற்பத்தித் திறன் செயற்பாடுகள்

அமைச்சினால் பொது நிருவாகம், கணக்கு நடவடிக்கைகள், தாபன நடவடிக்கைகள், உற்பத்தித் திறன் செயற்பாடுகள், ஆளுமை விருத்தி மற்றும் திறன் விருத்தி போன்ற இனங்காணப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஒவ்வொரு தரங்களையும் உள்ளடக்கும் வகையில் அலுவலர்கள் பங்கேற்கச் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் அமைச்சில் சேவையாற்றுகின்ற சகல அபிவிருத்தி அலுவலர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் பட்டதாரிப் பயிலுனர்களுக்கு அலுவலக முறையியல் பற்றிய இரண்டு நாள் பயிற்சிச் செயலமர்வு நடாத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக பதவிநிலை அலுவலர்களுக்கு விடய அலுவல்கள் பற்றிய இரண்டு நாள் செயலமர்வும் சாரதிச் சேவை மற்றும் சிற்றூழியசர் சேவை அலுவலர்களுக்கு விடய ரீதியான இரண்டு நாள் வதிவிட செயலமர்வும் நடாத்தப்பட்டது.

அமைச்சின் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 5S திட்டத்தை அமுல்படுத்தல், உற்பத்தித் திறன் சுற்றுக்களைத் தாபித்தல் மற்றும் புதிய கருத்திட்டங்களை அமுல்படுத்தல் போன்றன மேற்கொள்ளப்பட்டதுடன், “உற்பத்தித் திறன் கையேடு” தயார் செய்யப்பட்டு மேற்படி வேலைத்திட்டத்திற்கமைய உற்பத்தித் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மறுசீரமைக்கப்பட்டன.

## 10.2. திட்டமிடல் பிரிவு

### ❖ வருடாந்த செயற்திட்டம் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

ஒவ்வொரு வருடமும் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் சம்பந்தமான செயற்பாடுகளையும் மதிப்பீடுகளையும் உள்ளடக்கியதாக வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்படுவதுடன், 2013 ஆம் ஆண்டுக்காக அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்துள்ள நிறுவனங்கள் சம்பந்தமான வருடாந்த செயற்திட்டம் தயார் செய்யப்பட்டது.

வருடாந்த செயற்திட்டத்திற்கமைய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் முறையாக அமுல்படுத்தப்படுவதை அவதானித்தல் மற்றும் மதிப்பீடு செய்யவென 11 முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் இந்த ஆண்டில் நடாத்தப்பட்டதுடன் பிரதானமாக வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறையின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை வினைத்திறனும் பயன்மிக்கதாகவும் மாற்றியமைக்கும் பொருட்டு அவசியமான ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் இதன் மூலம் பெற்றுக்கொடுக்க முடிந்தது.

### ❖ முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் கருத்திட்டப் பிரேரணைகள்

வருடாந்த செயற்திட்டத்திற்கமைய காலாண்டு அடிப்படையில் 2013 ஆம் ஆண்டில் 4 முன்னேற்ற அறிக்கைகள் தயார் செய்யப்பட்டதுடன் அவை உரிய நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டன. அவ்வாறே கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினாலும் கருத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் முன்னேற்றம் கண்காணிப்புச் செய்யப்படுவதடன், அது சம்பந்தமான 4 முன்னேற்ற அறிக்கைகள் அமைச்சினால் தயார் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் மூலம் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங் களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப்

பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் 2013 ஆம் ஆண்டில் இந்த அமைச்சு வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை சம்பந்தமாக அமுல்படுத்த திட்டமிட்டுள்ள 18 கருத்திட்டப் பிரேரணைகளை திரைசேரியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் சமர்ப்பித்துள்ளது.

### ❖ "ஜனசெவன" பத்திரிகை

அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்வேறு அபிவிருத்திக் கருத்திட்டங்களின் தகவல்களை உள்ளடக்கி அது தொடர்பாக மக்களை அறிவுறுத்துவதற்கு ஜனசெவன என்றழைக்கப்படுகின்ற பத்திரிகை வெளியிடப்பட்டதுடன், 2013 ஆம் ஆண்டில் தினமின பத்திரிகையின் ஒரு மேலதிக இணைப்பாக இவ்வாறான 12 வெளியீடுகள் வெளியிடப்பட்டன.

## 10.3. வீடமைப்புப் பிரிவு

### ❖ தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்தல்

இலங்கையில் வீடமைப்பு மயமாக்கலுக்கு இதுவரை முறையான முறையியலொன்று இருக்கவில்லையென்பதுடன் அதற்கு பரந்தளவான மற்றும் தேசிய ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடிய கொள்கையொன்றைத் தயார் செய்ய வேண்டியதன் தேவை பெரும்பாலும் எழுந்துள்ளது. இதற்காக இந்த அமைச்சினால் தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்யும் முதற்கட்ட நடவடிக்கை 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி தேசிய வீடமைப்புக் கொள்கையைத் தயார் செய்வதற்கு கல்விமான்கள், வீடமைப்புத் துறையில் ஈடுபட்டுள்ள நிபுனர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துக்களைக் கோருவது 2013 ஆம் ஆண்டின் ஆரம்ப இரண்டு காலாண்டுகளில் மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படிக் கருத்துக்களையும் பிரேரணைகளையும் கவனத்திற்கொண்டு தேசிய வீடமைப்புக் கொள்கைக்கான வரைபை தயார் செய்து வெளியிடுவதற்கு 2013 ஆம் ஆண்டில் அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### ❖ கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபித்தல்

மாவட்ட மட்டத்தில் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில், மற்றும் கிராம அலுவலர் பிரிவு மட்டத்தில் கிராமிய வீடமைப்புக் குழுக்களைத் தாபிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் "அத்வெல" எனும் வெளியீட்டினூடாக கிராமிய வீடமைப்புக் குழுக்களின் செயற்பாட்டினை வினைத்திறனாக்கிக் கொள்ளவும் இந்த ஆண்டில் ஆற்றல் கிடைத்துள்ளது.

### ❖ இலங்கையின் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான தகவல்களைப் பெற்றுக்கொடுத்தல்

கற்ற பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு அபிவிருத்தி சம்பந்தமான சிபாரிசுகளை அமுல்படுத்தத் தேவையான தகவுதிறன்களும் தகவல்களும் இந்த அமைச்சினால் அமைச்சரவையிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

மேலும் ஐக்கிய நாடுகளின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் பற்றிய குழுவினால் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையகத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைக்கு இலங்கையின் வீடமைப்பு மற்றும் குடியிருப்பு மயமாக்கல் பற்றிய முன்னேற்றம் இந்த அமைச்சினூடாக பெற்றுக்கொடுக்கப்பட்டது.

### ❖ உலக குடியிருப்புத் தினம்

"மாற்றமடையும் நகரத்தில் இலகுவான பயணப்பாதை" என்ற தொனிப்பொருளின் ஊடாக 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 07 ஆம் திகதி உலக குடியிருப்புத் தினம் மேன்மைதங்கிய ஜனாதிபதி அவர்களின் தலைமையில் மொரட்டுவ சொய்சாபுர தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டப் பூமியில் நடாத்துவதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டதுடன், அன்றைய தினம் சொய்சாபுர தொடர்மாடி வீடமைப்புக் கருத்திட்டமும் அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன. மேலும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை முன்னிட்டு நகரப் பிரதேசங்களில் வாழும் நகர்ப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் புதிய வீடமைப்புக் கருத்திட்டங்களை நிர்மாணித்தல், குறைந்த வருமானம் பெறும் மக்கள் குழுக்களின் பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கான பல்வேறு கருத்திட்டங்களை அமுல்படுத்தல், இளைஞர்கள், யுவதிகள் மற்றும் பெண்களின் சமூகப் பாதுகாப்புக்கான நிகழ்ச்சித்திட்டங்களை

அமுல்படுத்துவதும் இந்த அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு மேலதிகமாக யப்பான் சர்வதேச தொண்டர் ஊழியர் நிகழ்ச்சித்திட்டத்தினூடாக 1.6 மில்லியன் ரூபாவான திறைசேரி ஏற்பாடுகள் மூலம் வவுனியா மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் வீடமைப்புக் கருத்திட்டங்களது உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கும் இந்த அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

- **வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்**

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆகியன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துகின்ற பிரதான நிறுவனங்களாகும் என்பதுடன் ‘‘ஜன செவன’’ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம், ‘‘உபகார கடன்’’ நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ‘‘நகமு புறவற’’ வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியன இந்த ஆண்டில் அமுப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களாகும் என்பதுடன் இவை வீடமைப்புக் கருத்திட்டங்களில் முன்னுரிமை பெறுகின்றன.

ஜனசெவன வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டில் இலக்காகக் கொள்ளப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 40,304 ஆகும் என்பதுடன் இவற்றில் 19,187 வீடுகளின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் 4,776 வீடுகளின் வேலைகளை பூர்த்தி செய்யும் ஆற்றல் கிடைத்தது. நகமு புறவற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்காகக் கொள்ளப்பட்ட 8,779 வீடுகளில் 5,258 வீடுகளின் வேலைகள் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதுடன், இது விகிதாசார அடிப்படையில் 60 சதவீதமாகக் காணப்பட்டது. மேலும் உபகார கடன் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலக்காக் கொள்ளப்பட்ட வீடுகள் 16,000 ஆகும் என்பதுடன், இவற்றில் 11,186 வீடுகளின் வேலைகளை ஆரம்பிக்க முடிந்தது.

## 10.4. தொழில்நுட்பப் பிரிவு

### ❖ நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டம்

நிர்மாணக் கைத்தொழிலானது நாட்டின் அபிவிருத்தியில் நேரடியாக தாக்கம் செலுத்துவதனால் இதனை மென்மேலும் வினைத்திறனுடனும் தரமாகவும் உயர்மட்டத்திற்குக் கொண்டுவருதல் மற்றும் பிராந்திய ரீதியிலும் பூகோள ரீதியிலும் போட்டித்தன்மை மிக்க மட்டத்திற்குக் கொண்டுவரும் நோக்கத்துடன் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை தாபிக்க அமைச்சு தீர்மானித்தது.

அதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கையாக அமைச்சரவைத் துணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், சட்டமா அதிபர் இதற்கான வரைவை தயார் செய்ததன் மூலம் சட்டமா அதிபர் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஆற்றல் அமைச்சுக்குக் கிடைத்தது. இலங்கையில் நிர்மாணத்துறையின் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தை அமுல்படுத்த உத்தேசித்திருப்பதுடன், அதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

### ❖ ''மஹாபீமாணீ'' தேசிய வாரம் மற்றும் விருது வழங்கும் வைபவம்

நிர்மாணிப்புத் துறையின் முன்னேற்றத்திற்காக நிர்மாணிப்புக் கலைஞர்கள், ஒப்பந்ததாரர்கள் மற்றும் தொழில்வல்லுனர்களை பாராட்டும் நோக்கத்துடன் இந்த அமைச்சின் வழிகாட்டலின் கீழ் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் இலங்கை நிர்மாணச் சங்கத்துடன் இணைந்து மஹாபீமாணீ தேசிய விருது வழங்கும் வைபவத்தை நடாத்தியது.

இதனை முன்னிட்டு பசுமைக் கட்டிடங்கள்/ பூர்த்திசெய்யப்பட்ட மதிப்பீட்டு முறையியல்களை மேம்படுத்துவதற்காக இலங்கைக் கட்டிடச் சபையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்பட்டதையடுத்து மேற்படி சபையின் உதவியுடன் சிறந்த பசுமை நிர்மாணிப்பு விருது வழங்கும் நிகழ்வும் ஆரம்பிக்கப்பட்டது. மேலும் நிர்மாணிப்புத் துறைக்கு இளைஞர்களின் பலத்தை அதிகம் கவர்ந்தெடுப்பதற்காக சிறந்த கலைஞர்கள், இயந்திரசாதன இயக்குனர்கள், இயந்திரசாதன கலைஞர்களைப் பாராட்டுவதற்கான போட்டி நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்டது.

## 10.5. தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவு

1973 இன் 01 ஆம் இலக்க வீடமைப்பு சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்திற்குச் பொறுப்பேற்கப்பட்ட வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுப்பது தேசிய வீடமைப்பு ஆணையாளர் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், 2013 ஆம் ஆண்டில் வழங்கப்படவிருந்த 100 உறுதிகளில் 88 உறுதிகள் ஆண்டினுள் முறையாக வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க முடிந்தது. மேலும் அரசாங்கத்திற்கு பொறுப்பேற்றுக்கொள்ளப்பட்ட வீடுகளின் உரிமையாளர்களுக்கு நட்டஈடு செலுத்தவும் 2013 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு முடியுமானது.

அவ்வாறே வீடமைப்புச் சொத்தாண்மை உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் வாடகைக் குடியிருப்பாளர்களுக்கு உறுதிகளைப் பெற்றுக்கொடுக்கும் போதும் ஒவ்வொரு வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்தும் வீட்டிற்கான விலைமதிப்புப் பெறுமதி அறவிட்டுக்கொள்ளப்பட்டதுன், 2013 ஆம் ஆண்டில் அவ்வாறு அறவிட்டுக்கொள்ளப்பட்ட மொத்த விலைமதிப்புத் தொகை ரூபா 1,265,171.00 ஆகும். மேற்படி மொத்தத் தொகையும் அமைச்சினால் தேசிய வீடமைப்பு நிதியத்தில் செலவு வைக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 10.6. கணக்காய்வுப் பிரிவு

2013 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கமைய உத்தேச கணக்காய்வு அறிக்கைகள் 44 இல் 16 அறிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதுடன், ஆரம்ப விசாரணைகளும் மேற்கொள்ளப் பட்டுள்ளன. உத்தேச இலக்கை அடைந்துகொள்ள முடியாமைக்கான பிரதான காரணம், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டமை மற்றும் பயிற்றப்பட்ட பதவியணியினர் இல்லாமையாகும். எவ்வாறாயினும்

வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கூட்டங்கள் முறையாக நடாத்தப்பட்டுள்ளதுடன் அதன் மூலம் அமைச்சு மற்றும் அமைச்சுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் சம்பந்தமான சிக்கல்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு அவற்றை சீர்செய்வதற்கும் சிக்கல்களைக் குறைத்துக்கொள்ளவும் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

## 11. 2013 ஆம் ஆண்டு அமைச்சு எதிர்நோக்கிய சவால்கள்

- **நிரந்தர பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாது போனமை.**

அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட நிரந்தர பதவியணியின் வெற்றிடங்களை 2013 ஆம் ஆண்டில் அமைச்சினால் முறையாக நிரப்ப முடியவில்லை. முக்கியமாக அமைச்சுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளான பிரதம நிதி அலுவலர், பிரதிப் பணிப்பாளர் (பொறியியல்) மற்றும் பிரதிப் பணிப்பாளர் (நகரக் குடியிருப்பு) ஆகிய பதவிகளின் வெற்றிடங்களை, உரிய நாடளாவிய சேவைகளில் தகைமைபெற்ற அலுவலர்களுக்குக் காணப்பட்ட பற்றாக்குறை காரணமாக பூர்த்தி செய்துகொள்ள முடியவில்லை.

மேலும் கனிய அளவையாளர், தொழில்நுட்ப அலுவலர் ஆகிய பதவி வெற்றிடங்களுக்குரிய ஆட்சேர்ப்பு ஒழுங்குவிதிகளை அங்கீகரித்துக் கொள்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக பூர்த்தி செய்துகொள்ளும் ஆற்றல் கிடைக்கவில்லை. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு வாய்ப்புக் கிடைக்காமை காரணமாக இந்த ஆண்டின் அமைச்சின் தொழில்நுட்பப் பிரிவின் பணிகளுக்கு கடுமையான தடைகள் ஏற்பட்டன.

- **சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு போதியளவு நிதி ஏற்பாடுகள் கிடைக்காமை**

அமைச்சுக்குத் தேவையான சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்கு போதியளவு ஏற்பாடுகள் கிடைக்காமை காரணமாக 2013 ஆம் ஆண்டு அமைச்சின் அன்றாடப் பணிகளுக்கு தடை ஏற்பட்டது. அமைச்சில் சேவையாற்றிய அலுவலர்களின் உபயோகத்திற்குப் போதியளவில் கணனி இயந்திரங்கள், பிரதிபண்ணி இயந்திரங்கள் கிடைக்கவில்லை என்பதுடன், அவற்றைக் கொள்வனவு செய்வதற்கும் போதியளவில் ஏற்பாடுகள் அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருக்காமை காரணமாக தற்போது பயன்படுத்துகின்ற உபகரணங்களையே அதிகளவில் பயன்படுத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் மேற்படி உபகரணங்களும் அடிக்கடி சேதமடைகின்ற நிலைமைகள் ஏற்பட்டதுடன், இதனால் நாளாந்தப் பணிகளை முறையாக நிறைவேற்றிக் கொள்வது கடும் சவாலாக அமைந்திருந்தது.

வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தும் போது எதிர்நோக்கிய சவால்கள் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் போது குறிப்பாக பயன்கள் உரித்தாக வேண்டிய ஆட்களைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் பலவீனம் காரணமாக உரிய வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதும் சற்றுத் தாமதமடைந்தது. அதற்கமைய இலக்காகக் கொள்ளப்பட்ட வீட்டு அலகுகள் அனைத்தையும் உரிய காலஎல்லைகளுக்கு நிர்மாணிப்பதற்கான பணிகளை ஆரம்பிக்கும் ஆற்றல் கிடைக்கவில்லை.

மேலும் 2013 ஆம் ஆண்டு நிலவிய காலநிலை மாற்றங்கள் காரணமாக வீட்டு அலகுகளின் வேலைகளை ஆரம்பிப்பது தாமதமடைந்ததுடன், ஆரம்பிக்கப்பட்ட வீட்டு அலகுகளின் வேலைகளை நிறைவுசெய்வதற்கும் உரிய காலப்பகுதிக்குள் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

ඉදිකිරීම්, ඉංජිනේරු සේවා, නිවාස හා පොදු පහසුකම් අමාත්‍යාංශය

நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு

Ministry of Construction, Engineering Services, Housing & Common Amenities